**பாதெனியா - அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் - 2014**

---

பாதெனியா - அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்கான அரசாங்க முகவரான கொரியாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2008 திசெம்பர் 19 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ - 18 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 1 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது

**1.2 செயற்திட்டத்தின் குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின்படி, முன்னாள் நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு தற்போதைய நெடுஞ்சாலைகள், மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன முறையே செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன (அ) இலங்கையின் வடமத்திய பிராந்தியத்தில் பிரதான போக்குவரத்து பகுதியில் அமைந்துள்ள பாதெனியா – அநுராதபுரம் வீதிக்கு இடையிலான வீதிப் பிரிவை முன்னேற்றுவதன் ஊடாக சமூகச் செலவினைக் குறைப்பதனாலும் கைத்தொழில் போட்டியினை உயர்த்துவதனாலும் பிராந்தியத்தின் பொருட்கள் மற்றும் மக்களின் பரிமாற்றத்தையும் அதேபோல் தேசிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்பவற்றை உயர்த்துவதையும் செயற்படுத்துவது மற்றும் (ஆ) கட்டுநாயக்கா – பாதெனிய பிரிவு வீதியை இணைப்பதற்கு திட்டமிடுதலுடன் கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும கலாச்சார மரபுரிமையும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலும் அமைந்துள்ள இலங்கையின் வடமத்திய பிராந்தியத்திற்கும் இடையில் பிரயாணிகளது போக்குவரத்தினை வசதியளிப்பதன் மூலம் இலங்கையினுடைய சுற்றுலாக் கைத்தொழிலின் சர்வதேச போட்டித் தன்மையை வலுப்படுத்துவற்கும் எதிர்பார்ககப்படுகின்றது. கடன் உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,670 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 55 மில்லியனிற்கு சமமான ரூபா 7,554.03 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. 2012 நவம்பர் மாதத்தில் ரூபா 1,232.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.32 மில்லியன் குறை நிரப்பு கடனால் ஆரம்ப கடன் தொகை அதிகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 யூலை 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 01 அளவில் 30 மாதங்களிற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 நவம்பர் 30 ஆந் திகதியே பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீதுதெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டினையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையினையும் உறுதிப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் கண்ணோட்டத்தில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியவையாக இருந்ததா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும்

செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்குகின்றதா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) செயற்திட்ட அமுலாக்கலிற்காகப் பின்பற்றப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவுகள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) நிதிக் கூற்றுக்களானவை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதும்,

**2. நிதிக்கூற்றுக்கள்**

------------------------

**2.1 அபிப்பிராயம்**

--------------------

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்ததகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2014 திசெம்பர் 31 வரை நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டஓதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2014 ஆம் ஆண்டினுள் | 2014 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| ஈடிசீஎவ் | 66.32 | 8,786.93 | - | - | 9,292.15 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,115.97 | 50.00 | 17.70 | 1,304.55 |
| மொத்தம் | 66.32 | 10,902.90 | 50.00 | 17.70 | 10,596.70 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

வீதி மீள் புனரமைப்பு பணிகள் 2012 நவம்பர் 30 இல் பூர்த்திசெய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெயினும், நிறைவேற்று முகவரால் செயற்பாட்டு நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு 2014 திசெம்பர் 31 வரையிலும் கூட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களின் பிரகாரம், குடியிருப்பு காணிகள் உள்ளடங்கலாக 8 மாவட்டங்களில் 1,763 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 984 காணித் துண்டுகளிற்காக மாத்திரம் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. அதில் 707 காணித் துண்டுகள் மாத்திரம் காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம் காணிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி உடமையாளர்களிற்கான இழப்பீடு செலுத்துவதிலுள்ள தாமதம் காரணமாக செயற்திட்டத்தால் ரூபா 3.46 மில்லியன் தொகையான வட்டி செலுத்த வேண்டியிருந்தது.